செ.வெ.எண்: நாள்:17.08.2021

**நாமக்கல் மாவட்டத்தை பசுமை மாவட்டமாக உருவாக்கிட நாம் அனைவரும் ஒன்றாக அதிகளவில் மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் வேண்டுகோள்.**

-----

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வனத்துறையின் சார்பில், மாவட்ட பசுமை குழுக்கூட்டம் மாவட்ட வன அலுவலர் திரு.இராஜாங்கம் இ.வ.ப அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் இன்று (17.08.2021) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுச்சூழலை பாதுகாத்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி மாநிலத்தில் வன பகுதியின் அளவை உயர்த்திட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். அந்த வகையில் மாவட்டங்கள் தோறும் பல்வேறு மரங்களை வளர்த்து இயற்கையை பாதுகாத்திட நாம் அனைவரும் ஒன்றாக செயலாற்றிட வேண்டும். மரங்களை வளர்ப்பதினால் இயற்கையாகவே ஆக்சிஜன் உற்பத்தி நடைபெற்று, போதுமான ஆக்சிஜன் கிடைக்கும். மேலும், சுற்றுப்புறத்தில் உள்ள கார்பன் டை ஆக்சைடை மரங்கள் உட்கொள்வதால் சுற்றுச்சூழல் குளிர்ச்சியடைந்து, அதிக மழை பொழிவை ஏற்படுத்தும். இதனால் நிலத்தடி நீர்மட்டம் அதிகரிக்கும்.

நாமக்கல் மாவட்டத்தில் பசுமை பரப்பளவை அதிகரிக்க அடர்வனம் அமைக்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வருவாய்த்துறை, வனத்துறை, பள்ளிக்கல்வித்துறை, பொதுப்பணித்துறை, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரத்துறை), ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சிகள், பேரூராட்சிகள், நெடுஞ்சாலைத்துறை, தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, மாவட்ட தொழில் மையம் உள்ளிட்ட துறையினர் தங்கள் அலுவலகங்கள் மற்றும் துறைக்குட்பட்ட இடங்களில் அதிகளவில் மரக்கன்றுகளை நட்டு பராமரித்து, பசுமை பரப்பளவை அதிகரித்திட செய்ய வேண்டும். அதிகளவில் மரக்கன்றுகளை பராமரிப்பதால் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கும். மேலும் சுற்றுச்சூழல் மேம்படும்.

நமது முன்னோர்கள் நமக்கு பெருஞ் சொத்தாக விட்டுச்சென்ற இயற்கையை பாதுகாத்திட, ஏரி, குளம், குட்டைகளை புனரமைத்து, சீர்செய்திட நாம் அனைவரும் ஒன்றாக செயல்பட வேண்டும். மேலும், ஏரி, குளம், குட்டை கரைகளில் பனை விதைகளை நட்டு அடர்வனம் உருவாக்கிடவும், நாட்டு மரங்களாகிய பனை, வேம்பு,

அரச மரம், புங்கம், சவுக்கு, மூங்கில் உள்ளிட்டவற்றை வளர்த்திடவும் இளம் தலைமுறையினரிடம் ஊக்கம் அளிக்க வேண்டும். மேலும், இயற்கை மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாத்திட அதிக அளவில் மரக்கன்றுகளை நட்டு பராமரித்திட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். மரங்களை நடுவதோடு மட்டுமில்லாமல், அவற்றை முறையாக பராமரிப்பதிலும் அனைவரும் சிறப்பாக செயலாற்றிட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும் போது தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தே.இளவரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரமேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சு.வடிவேல், துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.எஸ்.சோமசுந்தரம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கணேசன், உட்பட நகராட்சி ஆணையாளர்கள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு ஆலுவலர், நாமக்கல் மாவட்டம்